# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2046/16 - 2017 නොවැම්බර් මස 22 වැනි බදදා - 2017.11.22

*2046/16 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 22 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: DEV/LND/02/ACQVI/04-8.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/15/2012/VE/158.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

தென் மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தின் தெவுந்தறைப் பிரதேச செயலாளர் பிரிவின் நாஒடுன்ன கிராம அலுவலர் பிரிவில், நாஒடுன்ன கிராமத்தில் அமைந்துள்ளதும் ஆரம்பப் பட இலக்கம் மாற/2586 இல் துண்டு இலக்கங்கள் 01 எனக் காட்டப்பட்டுள்ள காணி (விஸ்தீரணம் 0.8215 ஹெக்டயார்) ஆகும்:

**துண்டு இல. 1**

காணியின் பெயர்: கந்தேகேஹேன; விபரம்: வீட்டுத் தோட்டம், 30 - 40 வயதான தென்னை மரங்கள் 07, 10 - 15 வயதான மா மரம் 01, 10 வயதுடைய தேக்க மரம் 03, சுமார் 10 - 15 வயதான பிலா மரம் 01 மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கையைக் கொண்டது; விஸ்தீரணம்: 0.8215 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு தெவுந்தறைப் பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ரன்ஜித் யாப்பா,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அலுவலர்,
தெவுந்தறை.

பிரதேச செயலகம்,
தெவுந்தறை.
2017, ஒற்றோபர் 25.

12 - 109


1A - G 26629 - 24 (2017/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.